31.11.2013

தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

## மாங்காய் விலை குறைவு நேரடி விற்பனையில் விவசாயிகள்

கம்மாபுரம்:கம்மாபுரம் பகுதியில் மாங்காய் விளைச்சல் அமோகமாக உள்ள நிலையில், விலை குறைவால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். கம்மாபுரம் அடுத்த முதனை, இருப்புகுறிச்சி, இருளக்குறிச்சி, தெற்கிருப்பு, வடக்கிருப்பு, கிழக்கிருப்பு, மேற்கியிருப்பு, ஊ.அகரம், பெரியகாப்பாங்குளம், சின்னகாப்பாங்குளம் வி.சாத்தமங்கலம் உட்பட 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் விவசாயிகள் அதிகளவு முந்திரி, மா, பலா பயிர் செய்திருந்தனர்.

கடந்த 2011ல் வீசிய "தானே' புயலில் முந்திரி, மா, பலா மரங்கள் கடுமையாக சேதமடைந்தன. இதனால் கடந்த இரண்டு ஆண்டுகளாக மாங்காய் விளைச்சல் குறைந்து விவசாயிகள் பாதித்தனர். இந்நிலையில், இந்தாண்டு மாங்காய் விளைச்சல் அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். அதிக விளைச்சல் காரணமாக, கிலோ மாங்காய் 5 முதல் 10 ரூபாய் வரை குறைந்த விலைக்கு வியாபாரிகள் கொள்முதல் செய்வதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.இடக்குப்பம் விவசாயி கருப்பன் கூறுகையில், "தானே' புயலில் எனது தோப்பில் ஏராளமான மா மரங்கள் சேதமடைந்தன. மீதமுள்ள மரங்களில் மாங்காய் காய்ப்பு அதிகமாக உள்ளது. ஆனால் வியாபாரிகள் 5 முதல் 10 ரூபாய் வரை மட்டுமே கொள்முதல் செய்வதால், விவசாயிகளே நேரடியாக அருகிலுள்ள கிராமங்களுக்குச் சென்று, கிலோ மாங்காய் 10 முதல் 13 ரூபாய் வரை விற்கிறோம்' என்றார்.

## வெங்காயம் விலையை குறைக்க புதிதாக 10 பசுமை நுகர்வோர் கடைகள்: ஜெ.,

சென்னை : வெங்காயம் உள்ளிட்ட காய்கறி விலையைக் குறைக்க, உடனடியாக, 10 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் திறக்கப்படும்,"" என, முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

சட்டசபையில், துணை பட்ஜெட் மீதான விவாதத்தில், அவர் பேசியதாவது: மத்திய அரசின் தவறான பொருளாதார கொள்கையால், வெங்காயம் விலை அதிகரித்துள்ளது. சென்னை, கோயம்பேடு மார்க்கெட்டில் பெரிய வெங்காயம், கிலோ, 60 ரூபாய்க்கும், சின்ன வெங்காயம் (சாம்பார் வெங்காயம்) கிலோ, 75 முதல் 80 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. ரூ.50, ரூ.60 பழமுதிர் நிலையம் போன்ற கடைகளில், பெரிய வெங்காயம் கிலோ, 70 ரூபாய்க்கும், சின்ன வெங்காயம் கிலோ, 95 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. ஆனால், தமிழக அரசின் சார்பில் இயங்கும், பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளில், பெரிய வெங்காயம் கிலோ, 50 ரூபாய்க்கும், சின்ன வெங்காயம் கிலோ, 60 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. விலைவாசியால், மக்களுக்கு ஏற்பட்டுள்ள சுமையை குறைக்க, தமிழக அரசு, தன்னால் முடிந்த நடவடிக்கையை எடுத்துள்ளது. பெரிய வெங்காயம், மகாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களிலிருந்து தமிழகத்துக்கு வருகிறது. ஆந்திரத்தில் போராட்டம் நடப்பதால், அங்கிருந்து, வெங்காய வரத்து இல்லை. கோயம்பேட்டிற்கு, தினந்தோறும், 70 லாரிகளில் வெங்காயம் வந்து கொண்டிருந்தது, தற்போது, 50 லாரிகளாகக் குறைந்துள்ளது. 6 டன் விற்பனை தமிழகத்தின் வெங்காயத்தின் விலை, பிற மாநிலங்களில் நிலவும் விலையோடு ஒத்ததாகவே உள்ளது. நுகர்வோருக்கு, நியாயமான விலையில் வெங்காயம் கிடைக்க, சென்னை பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம், தினந்தோறும், 6 டன் பெரிய வெங்காயமும், 1 டன் சின்ன வெங்காயமும் விற்பனை செய்யப்படுகிறது. தற்போது, வெங்காய கொள்முதல் இரட்டிப்பாக்கப்பட்டு உள்ளது. வெங்காயம் உள்ளிட்ட காய்கறி விலையை குறைக்க, உடனடியாக, 10 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் திறக்கப்படும்.இவ்வாறு, ஜெயலலிதா கூறினார்.

### வெங்காயம் கிலோ ரூ.90

கோயம்பேடு : சென்னையில், வெங்காய விலை, 90 ரூபாயை எட்டியுள்ளது. கோயம்பேடு சந்தையில், கடந்த சில தினங்களாக, காய்கறி விலை அதிகரித்து வருகிறது. நேற்றைய நிலவரப்படி, ஒரு கிலோ சாம்பார் வெங்காயம் 90 ரூபாய், பெல்லாரி வெங்காயம் 70 ரூபாய், ஆந்திரா வெங்காயம் 55 ரூபாய், முருங்கைக்காய் 85 ரூபாய், நாட்டு தக்காளி 50 ரூபாய், பெங்களூர் தக்காளி 55 ரூபாய்க்கு விற்கப்பட்டன.
இது குறித்து கோயம்பேடு காய்கறி சந்தை ஆலோசகர் சவுந்திரராஜன் கூறுகையில்,""தீபாவளி வரை காய்கறி விலை குறைய வாய்ப்பில்லை. இதே நிலையில் நீடிக்கலாம்,"" என்றார்.

## தர்மபுரி மாவட்டத்தில் சராசரியை விட கூடுதல் மழை

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் அக்டோபர் 1ம் தேதி முதல் பரவலாக மழை பெய்தது. மாவட்டத்தில் உள்ள ஏரி, குளங்கள் மற்றும் அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து. மேலும், விவசாய கிணறுகள் மற்றும் குடியிருப்பு பகுதிகளில் உள்ள போர்வெல்களின் நீர்மட்டமும் உயர்ந்தது. இதனால், மகிழ்ச்சி அடைந்த விவசாயிகள் கடந்த சில தினங்களாக நெல், கரும்பு, சிறுதானியங்கள், பயறுவகை பயிர்களையும், தோட்டக்கலைத்துறை பயிர்களான காய்கறிகள் மற்றும் மலர்களை சாகுபடி செய்து வருகின்றனர்.

தர்மபுரி மாவட்டத்தில் அக்டோபர், 1ம் தேதி முதல், 23ம் தேதி வரை, 176.18 மி.மீ., மழை பதிவாகி உள்ளது. இது தமிழக அளவில் இரண்டாவது இடமாகும். தர்மபுரி மாவட்டத்தில், அக்டோபர் மாதம் சராசரி 46., மி.மீ., மழை பெய்யும். இந்தாண்டு அக்டோபரில் அதிகபட்ச மழை பெய்திருப்பது விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை கொடுத்துள்ளது.

## அதிக மழையால் மிளகாய் வற்றல் விலை உயர வாய்ப்பு



புதுடில்லி: மிளகாய் அதிகளவில் உற்பத்தி ஆகும் ஆந்திரா மற்றும் மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களில், கடுமையாக மழை பெய்து வருவதால், இதன் உற்பத்தி குறையும் என்ற அச்சப்பாடு எழுந்துள்ளது.இதனால், உள்நாட்டு சந்தை யில் கடந்த ஒரு சில தினங்களாக, மிளகாய் வற்றல் விலை உயர்ந்து வருகிறது.

முன்னணி நாடு:உலகளவில், மிளகாய் உற்பத்தியில், இந்தியா முன்னணி நாடாக உள்ளது. தற்போது, உள்நாட்டில் மிளகாய் உற்பத்தி, 13–14 லட்சம் டன்னாக உள்ளது. இது, உலக உற்பத்தியில், 45 சதவீதமாகும்.ஆந்திரா மற்றும் மத்திய பிரதேசம் ஆகிய

மாநிலங்களில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. குறிப்பாக, மத்திய பிரதேசத்தில், காய்ப்பு துவங்கிஉள்ள நிலையில், அதிக மழைப் பொழிவால் மிளகாய் செடிகள் பாதிக்கப்பட்டுள்ளன.இருப்பினும், ஆந்திராவில், தற்போது தான் மிளகாய் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால், அம்மாநிலத்தில், மிளகாய் பயிர் பாதிப்புக்குள்ளாகாது என்ற மதிப்பீடும் உள்ளது. கடந்த 2012–13ம் பருவத்தில், நாட்டின் மிளகாய் உற்பத்தி, 11–11.50 லட்சம் டன்னாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டு உள்ளது. இது, முந்தைய பருவத்தை விட, 15–20 சதவீதம் குறைவாகும்.முன்பேர வர்த்தகத்தில் ஈடுபட்டு வரும் என்.சி.டீ.இ.எக்ஸ். நிறுவனத்தில், ஒரு குவிண்டால், மிளகாயின் விலை, 6,264.70 ரூபாயாக உள்ளது.

மேற்கண்ட இரு மாநிலங்கள் தவிர, ஒட்டு மொத்த அளவில் பார்க்கும் போது, நடப்பு பருவத்தில், மிளகாய் வற்றல் உற்பத்தி கடந்த பருவத்தை போன்றே இருக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. இதர பயிர் சாகுபடி:கடந்த ஒரு சில ஆண்டுகளாக, உள்நாட்டில், மிளகாய் வற்றல் விலை நிலையாக உள்ளது. இதன் காரணமாக, பல விவசாயிகள் அதிக வருவாய் அளிக்ககூடிய, பருத்தி உள்ளிட்ட இதர பயிர் சாகுபடிக்கு மாறியுள்ளனர். மிளகாய் வற்றல் கையிருப்பு குறைவாக உள்ளது. என்றாலும், நவம்பர் மாதத்திற்கு பிறகு தான், இதன் உற்பத்தி எந்த அளவிற்கு இருக்கும் என்று துல்லியமாக மதிப்பிடமுடியும் என, இத்துறையைச் சேர்ந்த வர்த்தகர்கள் தெரிவித்தனர். நடப்பு 2013–14ம் நிதியாண்டில், ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான மூன்று மாத காலத்தில், மிளகாய் வற்றல் ஏற்றுமதி, கடந்தாண்டின் இதே காலத்தை விட, 19 சதவீதம் குறைந்துள்ளது. கடந்த2012–13ம் நிதியாண்டில், மிளகாய்வற்றல் ஏற்றுமதி, 2.81 லட்சம் டன்னாக இருந்தது. இது, மதிப்பின் அடிப்படையில், 2,261 கோடி ரூபாயாக இருந்தது. ஏற்றுமதி:இது, முந்தைய ஆண்டு ஏற்று மதியை விட, அளவின் அடிப்படையில், 17 சதவீதம் மற்றும் மதிப்பின் அடிப்படையில், 5 சதவீதம் அதிகமாகும். கடந்த 2011–12ம் நிதிஆண்டில், நாட்டின் மிளகாய் வற்றல் ஏற்றுமதி, 2.41 லட்சம் டன்னாக இருந்தது. இது, மதிப்பின் அடிப்படையில், 2,144 கோடி ரூபாயாக இருந்தது.

## கோதுமைக்கான ஏற்றுமதி விலையை குறைக்க மத்திய அரசு பரிசீலனை



புதுடில்லி: மத்திய உணவு அமைச்சகம், ஒரு டன் கோதுமைக்கான ஏற்றுமதி விலையை, 260 டாலராக குறைப்பது குறித்து, பரிசீலனை செய்து வருகிறது.இது குறித்து, மத்திய உணவு அமைச்சர் கே.வி.தாமஸ் கூறியதாவது:

நடப்பாண்டில், 20 லட்சம் டன் கோதுமையை ஏற்றுமதி செய்யும் வகையில், முக்கிய அமைச்சரவை குழு கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது. இக்கூட்டத்தில், ஒரு டன் கோதுமைக்கான ஏற்றுமதி விலை, 300 டாலராக நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், சர்வதேச சந்தையில் இதன் விலை தற்போது குறைந்துள்ளது. கோதுமையை ஏற்றுமதி செய்வதற்கான, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பல சர்வதேச ஏற்றுமதியாளர்கள், ஒரு டன் கோதுமைக்கான ஏற்றுமதி விலையை, 260 – 267 டாலர் என்ற அளவில் குறிப்பிட்டிருந்தனர்.
இந்நிலையில், ஏற்றுமதியாளர்கள் குறிப்பிட்டிருந்த விலை, மத்திய அரசு நிர்ணயித்திருந்த விலையை விட குறைவாக இருந்ததால், ஒப்பந்தபுள்ளி ரத்து செய்யப்பட்டது.ஆனால், அரசின் கைவசம், கோதுமை கையிருப்பு மிகவும் அதிகரித்துள்ளது. இச்சூழ்நிலையில், நடப்பாண்டில், கோதுமை அறுவடை செய்யப்பட்டு, கொள்முதல் செய்து இருப்பு வைக்க இடவசதி இல்லை.

இதனால், உணவு அமைச்சகம் கோதுமையின் ஏற்றுமதி விலையை குறைக்க திட்டமிட்டுள்ளது. இது குறித்து முடிவு எடுக்க, உணவு அமைச்சகம், மத்திய அமைச்சரவை குழுவின் பரிந்துரைக்கு அனுப்பியுள்ளது.

முதலில், பொதுத் துறையைச் சேர்ந்த, எஸ்.டி.சி., எம்.எம்.டி.சி., மற்றும் பி.இ.சி., ஆகிய நிறுவனங்கள் வாயிலாக, இந்திய உணவு கழகத்தின் கையிருப்பில் இருந்து, 20 லட்சம் டன் கோதுமையை, ஒரு டன், 300 டாலர் என்ற விலையில் விற்க அனுமதி

அளித்திருந்தது.

நடப்பாண்டில், இது வரையில் கோதுமை ஏற்றுமதி மேற்கொள்ளப்படவில்லை. கடந்த, அக்., 1ம் தேதி நிலவரப்படி, இந்திய உணவு கழகத்திடம், 3.60 கோடி டன் கோதுமை கையிருப்பு உள்ளது. இது, கையிருப்பு வைக்க வேண்டிய, 2.12 கோடி டன் அளவை விட அதிகமாகும்.கடந்த, 2012 – 13ம் நிதியாண்டில், 42 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதி செய்ததன் வாயிலாக, மத்திய அரசுக்கு, 140 கோடி டாலர் வருவாய் கிடைத்தது. அப்போது, ஏற்றுமதிக்கான, 1 டன் கோதுமையின் விலை, சராசரியாக, 311.38 டாலராக இருந்தது.இவ்வாறு, தாமஸ் கூறினார்.

### உளுத்தம் பருப்பு விலை குவிண்டாலுக்கு ரூ.1,000 உயர்வு : பதுக்கலால் ஒரே மாதத்தில்..



சேலம்: தீபாவளி பண்டிகைக்கு, இன்னும் சில நாட்களே உள்ள நிலையில், வியாபாரிகள், சுயலாபத்துக்காக, உளுத்தம் பருப்பின் விலையை குவிண்டாலுக்கு, 400 ரூபாய் வரை உயர்த்தி உள்ளனர்.இது, நடுத்தர மக்கள் மத்தியில், அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. பெரிய வியாபாரிகளின் பதுக்கல் காரணமாக, ஒரே மாதத்தில், இதன் விலை, குவிண்டா-லுக்கு, 1,000 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. மகாராஷ்டிரா:தமிழகத்துக்கு தேவையான உளுந்து, உளுத்தம் பருப்பு மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா, குஜராத் மற்றும் பர்மாவில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. பின்பு, சென்னையிலிருந்து தமிழகத்தின் பிற நக-ரங்களுக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.தமிழகத்தில் உளுந்து விளைச்சலில் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக, தேவையை வெளி மாநிலங்களே பூர்த்தி செய்துவந்தன.

இந்நிலையில், வட மாநிலங்களில் இருந்து உளுந்து, உளுத்தம் பருப்பை விற்பனைக்கு கொண்டு வந்த வியாபாரிகள், பதுக்கலில் ஈடுபட்டதால், தீபாவளி பண்டிகை நெருங்கும் தற்போதைய சூழ்நிலையில், மார்க்கெட்டில் உளுத்தம் பருப்புக்கு செயற்கையாக தட்டுப்-

பாடு ஏற்பட்டுள்ளது.இதனால், அக்டோபர் மாதத்தின் முதல் வாரத்தில், உளுத்தம் பருப்பின் விலை, குவிண்டாலுக்கு, 400 ரூபாய் அதிகரித்தது. அதைத் தொடர்ந்து மூன்றா- வது வாரத்தில், மேலும், 200 ரூபாய் உயர்ந்தது. இந்நிலையில், நேற்றும் குவிண்டாலுக்கு, 400 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. ஆக, நடப்பு மாதத்தில் மட்டும், உளுத்தம் பருப்பின் விலை குவிண்டாலுக்கு, 1,000 ரூபாய் வரை அதிகரித்து உள்ளது.

மொத்த விலை:அக்டோபர் மாதம் முதல் வாரத்தில், மொத்த விலையில், ஒரு குவிண்டால் முதல் ரக உளுத்தம் பருப்பின் விலை, 6,600 ரூபாயாகவும், இரண்டாம் ரகம் 6,100 ரூபாயாகவும், மூன்றாம் ரகம், 5,800 ரூபாயாகவும் விற்பனை ஆனது.நேற்று மொத்த விலையில், ஒரு குவிண்டால், முதல் ரக உளுத்தம் பருப்பின் விலை, 7,600 ரூபாய்க்கும், இரண்டாம் ரகம், 7,300 ரூபாய்க்கும், மூன்றாம் ரகம், 6,800 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது.

### வரத்து அதிகரிப்பால் தேயிலை விலை வீழ்ச்சி




கோவை: வரத்து அதிகரிப்பால், தென் மாநிலங்களில், தேயிலை தூள் விலை, கடும் வீழ்ச்சியடைந்துள்ளதாக, இந்திய தேயிலை வாரியத்தின் செயல் இயக்குனர் அம்பல- வாணன் தெரிவித்தார்.கோவையில் நேற்று நிருபர்களுக்கு அவர் அளித்த பேட்டி:நாடு முழுவதும் ஆண்டுக்கு, 7 கோடி கிலோ தேயிலை தூள் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில், 35 சதவீதம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. மீதமுள்ளவை உள்நாட்டு தேவைக்கு பயன்படுத்தப்படுகிறது. தென் மாநிலங்களில் ஹெக்டேருக்கு சராசரியாக 2,000 கிலோ, தேயிலை உற்பத்தி செய்யப்படுகிறது.கடந்த இரண்டு வாரங்களுக்கு முன், முதல் ரக தேயிலை தூள் கிலோ, 120 ரூபாய்க்கும், நடுத்தர ரகம் கிலோ, 90 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது.

அசாம் மற்றும் மேற்கு வங்கத்தில் இருந்து தேயிலை துாள் வரத்து அதிகரித்ததால், நடுத்தர ரக தேயிலை துாள் விலை, ஒரு கிலோ, 70 ரூபாய் ஆக வீழ்ச்சி கண்டுள்ளது.தொழிலை ஊக்குவிக்கும் வகையில், கொள்முதலுக்கான உரிமம் பெறும் முறை எளிமைப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது நாள் ஒன்றுக்கு மூன்று முதல் நான்கு பேர் வீதம் உரிமம் பெற்று வருகின்றனர்.வாடிக்கையாளர்களுக்கு, தரமான தேயிலை துாள் கிடைப்பதை உறுதிசெய்யும் வகையில், குறிப்பிட்ட தொழிற்சாலைகளில் தொடர் ஆய்வு மேற்கொண்டு வருகிறோம்.இவ்வாறு, அவர் தெரிவித்தார்.

### உற்பத்தி குறைவால்தக்காளி விலை கிடுகிடு



பழநி,: போதிய மழை இல்லாததால் தக்காளி விளைச்சல் பாதிக்கப்பட்டு, விலை உயர்ந்து உள்ளது. திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், பழநி, உடுமலைபேட்டை, பொள்ளாச்சி பகுதிகளில் ஏராளமான விவசாயிகள் தக்காளி சாகுபடி செய்கின்றனர். இங்கு விளைவிக்கப்படும் தக்காளி, கேரளா, ஆந்திரா மற்றும் கோல்கட்டா போன்ற நகரங்களுக்கு, ஓசூர் மார்க்கெட் மூலம் அனுப்பி வைக்கப்படுகிறது.போதிய மழையில்லாததால் தக்காளி விளைச்சல் பாதிக்கப்பட்டு, வரத்து குறைந்துள்ளது. கடந்த மாதம், ஒரு பெட்டி (15 கிலோ) 200 ரூபாய்க்கு விற்கப்பட்டது. தற்போது பெட்டி, 450 முதல் 550 ரூபாய் வரை தரத்திற்கு ஏற்றவாறு விற்கப்படுகிறது.தீபாவளியை முன்னிட்டு மேலும் விலை அதிகரிக்கலாம் என, வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். ஏற்கனவே வெங்காயம் விலை உயர்ந்துள்ள நிலையில், தக்காளி விலையும் உயர்ந்துள்ளது பொதுமக்களை கவலையில் ஆழ்த்தி உள்ள

திமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## தென்கரை கண்மாய் நிரம்பி மறுகால் பாய்ந்தது: விவசாயிகள் மகிழ்ச்சி

சோழவந்தான் அருகே தென்கரை கண்மாய் மழையின் காரணமாக நிரம்பி மறுகால் பாய்ந்ததால் விவசாயிகள் சிறப்பு பூஜை செய்து மலர்தூவி மகிழ்ந்தனர்.

சோழவந்தான் அருகே தென்கரை கண்மாய் பெரியாறு பாசன கால்வாயின் மூலம் நீர்வரத்துப் பெறுகிறது. தென்கரை கண்மாயில் உள்ள 8 மடைகள் மூலம் சுமார் 1436 ஏக்கருக்கு மேல் பாசன வசதி பெறுகின்றன. கால்வாய் மூலம் கண்மாய்க்கு வரும் தண்ணீர் நீர் வரத்து குறைந்து இருந்த நிலையில் கடந்த சில நாள்களாக சோழவந்தான் மற்றும் சுற்றுப்புற பகுதியில் கனமழை பெய்தது. இதில் தென்கரை கண்மாய் 4 வருடங்களுக்கு பின் நிரம்பி மறுகால் பாய்ந்தது. இதையொட்டி கண்மாயின் காவல் தெய்வமான கருப்புச்சாமிக்கு பொங்கல் வைத்து, ஆடு வெட்டி மறுகாலில் மலர் தூவி விவசாயிகள் சிறப்பு வழிபாடு செய்தனர்.

விழாவில் பொதுப் பணித்துறை பேரணை உதவிப் பொறியாளர் தண்டபாணி, பணி ஆய்வாளர்கள் ராஜலிங்கம், அழகேசன், பாசன ஆய்வாளர் போஸ்முருகன் மற்றும் பொதுப்பணித்துறைப் பணியாளர்கள் பாண்டி, மணிகண்டன் மற்றும் கிராம கமிட்டி பாசன உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மேலக்கால் கண்மாய், நிலையூர் கால்வாய் மூலம் நீர்வரத்துபெறும். இந்த வருடம் நிரம்பி மறுகால் பாய்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## வறட்சியால் தென்னை மரங்கள் பாதிப்பு: ஆட்சியர் நேரில் ஆய்வு

விருதுநகர் மாவட்டத்தில் வத்திராயிருப்பு, ஸ்ரீவில்லிபுத்தூர் ஒன்றியப் பகுதிகளில் வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் டி.என்.ஹரிஹரன் புதன்கிழமை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, விவசாயிகளிடம் குறைகளைக் கேட்டறிந்தார்.

விருதுநகரில் 25.10.13 அன்று நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், வறட்சியால் தென்னை மரங்கள் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், ஆட்சித் தலைவர் நேரடியாக பார்வையிட்டு நிவாரண உதவிகள் கிடைக்க நடவடிக்கை எடுக்கவும் விவசாயிகள் கோரிக்கை வைத்தனர்.

இதனையடுத்து மாவட்ட ஆட்சித் தலைவர் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகாவில் உள்ள கான்சாபுரம், வ.புதுப்பட்டி, செண்பகத்தோப்பு மற்றும் சேத்தூர் பகுதிகளுக்கு விவசாயத்

துறை அலுவலர்களுடன் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். பாதிப்புகள் குறித்த விவரங்களை விவசாயிகளிடம் கேட்டறிந்தார். இது குறித்து அரசின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, உரிய உதவிகள் கிடைக்க தேவையான நடவடிக்கைகள் எடுப்பதாக உறுதியளித்தார்.

ஆய்வின்போது, வேளாண்மை இணை இயக்குநர் சுப்பையா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) முருகதாஸ், வேளாண்மை உதவி இயக்குநர் பாண்டித்துரை, வேளாண்மை அலுவலர் வேலுச்சாமி, வட்டாட்சியர் தனலட்சுமி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 70.47 அடி

பவானிசாகர் அணை நீர்மட்டம் புதன்கிழமை நிலவரப்படி 70.47 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 2,312 கன அடி நீர் வந்தது.

அணையில் இருந்து ஆற்றில் 800 கனஅடி நீரும், வாய்க்காலில் 1,950 கனஅடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 11.15 டி.எம்.சி.

## கரும்பு விலையை நிர்ணயிக்க முத்தரப்புக் கூட்டம்

அதிகரித்து வரும் உற்பத்திச் செலவுகளைக் கருத்தில் கொண்டு, முத்தரப்புக் கூட்டத்தைக் கூட்டி, உடனடியாகக் கரும்பு கொள்முதல் விலையை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தினர்.

நாமக்கல் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி தலைமையில் நாமக்கல்லில் புதன்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில் விவசாயிகள் பேசியது:

உற்பத்திச் செலவு அதிகரித்து வருவதால், கரும்பு கொள்முதல் விலையை நிர்ணயம் செய்ய முத்தரப்புக் கூட்டத்தை உடனடியாகக் கூட்டி முடிவு செய்ய வேண்டும். வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்கு நஷ்டஈடு வழங்கவும், விடுபட்ட தென்னை மரங்களைக் கணக்கெடுப்பு செய்ய வேண்டும். தீவனங்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால், பால் கொள்முதல் விலையை பசும் பால் லிட்டருக்கு ரூ.5-ம், எருமைப் பால் லிட்டருக்கு ரூ.7-ம் உயர்த்தி வழங்க அரசுக்கு பரிந்துரை செய்ய வேண்டும்.

கொல்லிமலைப் பகுதியில் உள்ள மழைவாழ் மக்களின் அனுபவத்திலுள்ள நிலங்களுக்குப் பட்டா வழங்க வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களில் விவசாயிகளுக்கு முன்னுரிமை

அடிப்படையில் கடன் வழங்க வேண்டும். விவசாயத் தொழிலாளர்களுக்கு உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் உதவித்தொகை வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல கோரிக்கைகள் விடுத்தனர்.

அதற்குப் பதிலளித்து மாவட்ட ஆட்சியர் தட்சிணாமூர்த்தி பேசியது:

நாமக்கல் மாவட்டத்தில் வறட்சி நிவாரண நிதியாக ரூ.56 கோடி பெறப்பட்டதில் இதுவரை ரூ.55.76 கோடி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதேபோல, காய்ந்த தென்னை மரங்கள் குறித்து கணக்கெடுப்பு செய்து அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்ற அறிவுரையின்படி, மாவட்டத்தில் கணக்கெடுப்பு நடத்தியதில் 53,965 தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக அரசுக்கு அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவற்றுக்கு விரைவில் நிவாரணம் வழங்கப்படும். விடுபட்ட தென்னை மரங்களைக் கணக்கெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தென்னை மரங்கள் மற்றும் அனைத்துச் சாகுபடிகளையும் அடங்கல் பதிவேட்டில் சேர்க்க அனைத்துக் கிராம நிர்வாக அலுவலர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. கரும்பு விவசாயிகளின் கோரிக்கைகள் அரசுக்கு பரிந்துரை செய்யப்படும். கொல்லிமலையில் உள்ள மலைவாழ் மக்களின் அனுபவத்தில் உள்ள நிலங்களுக்கு 2006 சட்டத்தின்படி அனுபவச் சான்று வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சாலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவும், கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகளுக்குக் கடன் வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கனிமங்கள் குறித்து அரசுக்கு அறிக்கை அனுப்பும் வகையில் மாவட்ட அளவில் குழு அமைக்கப்பட்டுள்ளது.

அந்தக் குழுவின் அறிக்கை அரசுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றார் அவர்.

மாவட்ட வருவாய் அலுவலர் கோ.செங்குட்டுவன், வேளாண்மை இணை இயக்குநர் (பொறுப்பு) முரளிதரன், திருச்செங்கோடு வருவாய்க் கோட்டாட்சியர் தா.செங்கோட்டையன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## நவ. 5-இல் கரும்பு சாகுபடி பரப்பு பிரித்தளிக்கும் கூட்டம்

கிருஷ்ணகிரி மாவட்டம், சிங்காரப்பேட்டை, கல்லாவி பிர்காக்களில் கரும்பு சாகுபடி பரப்பு பிரித்தளித்தல் தொடர்பாக, கருத்துக் கேட்புக் கூட்டம் வரும் 5-ஆம் தேதி நடைபெற உள்ளது.

இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

சென்னை உயர் நீதிமன்ற தீர்ப்பின்படி திருப்பத்தூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை மற்றும் கொழுந்தம்பட்டியில் இயங்கி வரும் பண்ணாரியம்மன் சர்க்கரை ஆலைகளுக்கு இடையே

கிருஷ்ணகிரி மாவட்டம், சிங்காரப்பேட்டை மற்றும் கல்லாவி பிர்க்காகளில் கரும்பு சாகுபடிப் பரப்பு பிரித்தளித்தல் தொடர்பாக கருத்துக் கேட்புக் கூட்டம் வரும் 5-ஆம் தேதி நடைபெற உள்ளது. அன்று காலை 10 மணிக்கு நடைபெறும் கூட்டத்தில் தமிழ்நாடு அரசு சர்க்கரைத் துறை இயக்குநர் பங்கேற்கிறார். ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் இந்தக் கூட்டம் நடைபெற உள்ளது.

இந்த வழக்கில் தொடர்புடைய மனுதாரர்கள், விவசாய சங்கப் பிரதிநிதிகள், பங்குதாரர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களது கருத்துகளைப் பதிவு செய்யலாம். கருத்துக் கேட்புக் கூட்டத்தில் பங்கேற்கும் விவசாயிகள், அங்கத்தினர்கள் குடும்ப அட்டை நகல் அல்லது வாக்காளர் அடையாள அட்டையின் நகல் அல்லது புகைப்படத்துடன் கூடிய வங்கி கணக்கு புத்தகத்தின் நகல், கரும்பு எடை சீட்டு நகல் அல்லது கரும்பு கிரய பட்டுவாடா ரசீது ஆகியவற்றை உடன் எடுத்து வரவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எலுமிச்சை விலை குறைந்தது

சேலம் மாவட்டம், தம்மம்பட்டி சந்தையில் எலுமிச்சை குறைந்த விலையில் விற்பனை

செய்யப்பட்டது.

திருச்சி மாவட்ட கிராமப் பகுதிகளில் இருந்து தம்மம்பட்டிக்கு எலுமிச்சை பழங்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. கடந்த சில மாதங்களாக எலுமிச்சை ஒன்று ரூ.3 முதல் ரூ.7 வரையும் விற்பனை செய்யப்பட்டது.

ஆனால், தம்மம்பட்டியில் புதன்கிழமை நடைபெற்ற வாரச் சந்தையில் எலுமிச்சை மூட்டைகள் குவிக்கப்பட்டு விற்பனைசெய்யப்பட்டன. அதிக அளவில் எலுமிச்சைகள் விற்பனைக்கு வந்ததால், அவற்றின் விலைக் குறைந்து ஒரு பழம் ரூ.1க்கு விற்கப்பட்டது.

## ஏற்காட்டில் அரிய வகை ஆர்கிட் மலர்

சேலம் மாவட்டம், ஏற்காடு பொட்டானிக்கல் கார்டன் ஆராய்ச்சி நிலையத்தில் அரிய வகை ஆர்கிட் மலர்கள் பூத்துள்ளது.

இந்த மலரின் செடிகள் இமய மலைப் பகுதிகளிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளது. தற்போது மூன்றுவகை செடிகளில் ஆர்கிட் மலர்கள் பூத்துள்ளன.

இதன் மலர்கள் பெண்கள் அணியும் காலணிகள் போல் உள்ளதால், இவற்றை பெண்கள் காலணி மலர் என்று அழைக்கின்றனர்.

ஏற்காடு பொட்டானிக்கல் ஆராய்ச்சி நிலையத்தில் கண்ணாடி அறைகளில், மிகவும் பாதுகாப்பாக இதன் செடிகள் வளர்கப்படுகின்றன. ஆர்கிட் மலர்களில் 125 வகையானச் செடிகள் உள்ளன.

இந்த மலர்கள் 30 நாள்கள் முதல் 100 நாள்கள் வரை வாடாமல் இருக்கும் என்றுக் கூறப்படுகிறது. இதில் சில செடிகளில் பூக்கும் மலர்கள் 128 நாள்கள் வரை வாடாமல் இருக்கும் என்றும், தற்போது 60 வகையான செடிகளில் ஆர்கிட் மலர்கள் பூத்துள்ளன என்றும் பொட்டானிக்கல் ஆராய்ச்சி நிலையத்தின் மேற்பார்வையாளர் பி.எஸ். இளங்கோ தெரிவித்தார்.

## கோமாரி நோய் தாக்கியமாடுகளுக்கு மூலிகை மருத்துவம்

கோமாரி நோய்த் தாக்கியுள்ள மாடுகளுக்கு முதலுதவி சிகிச்சையாக அளிக்க வேண்டிய மூலிகை மருந்துகளை நாகை மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி விளக்கியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு :

கோமாரி நோய்த் தாக்குதலுக்குள்ளான மாடுகளுக்கு மூலிகை மருந்துகள் அளிப்பதன் மூலம் 5 நாள்களில் அந்தக் கால்நடைகள் குணமடைவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

வாய் கோமாரி நோய் தாக்குதலுக்குள்ளான மாடுகளுக்கு, 50 கிராம் சீரகம், 30 கிராம் வெந்தயம், 10 கிராம் மஞ்சள் பொடி மற்றும் கருப்பட்டி (பனை வெல்லம்) 20 கிராம் ஆகியவற்றை அரைத்து, ஒரு தேங்காய் துருவலுடன் கலந்து தினமும் 2 வேளை வீதம் குறைந்தபட்சம் 3 நாள்களுக்கு வழங்க வேண்டும்.

மாட்டின் தலையைத் தூக்கிப் பிடித்து, 2 கடைவாய் பகுதியிலும் மெதுவாக உள்ளே செலுத்த வேண்டும். இந்த முறையை முறையாகக் கடைபிடித்தால் 5 நாள்களில் அந்த மாடு குணமடையும். கோமாரி கால்புண் ஏற்பட்ட மாட்டின் கால்களை உப்பு, மஞ்சள் கலந்த நீரில் கழுவி, ஈரத்தை சுத்தமான காய்ந்த துணியால் ஒற்றி எடுத்த பின், 100 கிராம் குப்பைமேனி, 10 பூண்டு பல், 100 கிராம் மஞ்சள் ஆகியவற்றை இடித்து, 250 கிராம் இலுப்பை எண்ணெய்யுடன் கலந்து காய்ச்சி, காலில் தேய்க்க வேண்டும் என அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாழையில் புழு தாக்குதல்: கட்டுப்படுத்த வழிமுறைகள்

புதிதாக நடவு செய்யப்பட்டுள்ள இளம் வாழைக் கன்றில் புழுத் தாக்குதல் தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த அண்ணாகிராமம் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் பிரேமா ஆலோசனை தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து அவர் நமது செய்தியாளரிடம் கூறியது:

பண்ருட்டி வட்டம், அண்ணாகிராமம் ஒன்றியத்தைச் சேர்ந்த சித்திரைச்சாவடி, அருங்குணம், பி.என்.பாளையம், பி.வி.பாளையம், சன்னியாசிப்பேட்டை, பாலூர் உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட கிராமங்களில் சுமார் 250 ஹெக்டர் நிலப் பரப்பில் வாழை நடவு செய்யப்பட்டுள்ளது. இதில் புழுத் தாக்குதல் தென்படுகிறது. இவற்றை விஷ உணவு வைப்பதின் மூலம் கட்டுப்படுத்தலாம். செய்முறை (ஒரு ஏக்கருக்கு): அரிசி தவிடு 1 கிலோ, வெல்லம் அல்லது நாட்டு சர்க்கரை 1 கிலோ, ஃபெவின் அரை கிலோ அல்லது மீத்தோமி 1 கிலோ ஆகியவற்றை புட்டுக்கு மாவு பிசைவது போல் உருண்டையாக்கி, உடைந்த மண் பானை ஓட்டின் மீது 20 இடத்தில் வைப்பதின் மூலம் இந்தப் புழுவை கட்டுப்படுத்தலாம் என்றார் அவர்.

## விவசாயிகளுக்கு தென்னங்கன்றுகள்

செஞ்சி கூட்டுறவு விவசாய வங்கி சார்பில் வருடாந்திர பேரவைக் கூட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சியில் மாநிலங்களவை உறுப்பினர் இரா.லட்சுமணன் பங்கேற்று சுமார் 500 விவசாயிகளுக்கு தென்னங்கன்றுகளை வழங்கினார். விழாவிற்கு கூட்டுறவு வங்கியின் தலைவர் வி.ரங்கநாதன் தலைமை வகித்தார். வங்கிச் செயலர் என்.ரவிச்சந்திரன் வரவேற்றார். முன்னாள் எம்எல்ஏக்கள் வே.ஏழுமலை, ஆர்.தமிழ்மொழிராஜதத்தன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அதிமுக ஒன்றியச் செயலர்கள் செஞ்சி அ.கோவிந்தசாமி, வல்லம் கு.விநாயகமூர்த்தி, செஞ்சி அதிமுக நகரச் செயலர் வி.ஆர்.பிரித்விராஜ், அண்ணா ஆசிரியர் நல கூட்டணி பொதுச் செயலர் கா.இர.குப்புதாசு, எம்ஜிஆர் இளைஞர் அணிச் செயலர் சரவணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## நாட்டுக்கோழிகளை தாக்கும் ஒட்டுண்ணி நோய்கள்



கிராமங்களின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு நாட்டுக்கோழி வளர்ப்பு முக்கிய பங்கு வகிக்கின்றன. நிலமற்ற விவசாயிகளின் குடும்ப வருமானத்தை பெருக்கும் லாபம் ஈட்டும் தொழிலாக நாட்டுக்கோழி வளர்ப்பு விளங்குகிறது.

நாட்டுக்கோழி வளர்ப்பு

இன்றைய சூழலில் கறிக்கோழி இறைச்சியை விட, நாட்டுக்கோழி இறைச்சி விலை அதிகமாக இருக்கும் போதும், நாட்டுக்கோழி இறைச்சி உண்ணும் பழக்கம் நம்மிடையே அதிகரித்து வருகிறது. இவ்வாறு நாட்டுக்கோழி வளர்ப்பு நமது நாட்டில் 80 சதவீதம் கிராம மக்களின் வேளாண்மையுடன் கூடிய, உபரித்தொழிலாக உள்ளது.

இந்தநிலையில் எதிர்பாராத விதமாக நாட்டுக்கோழிகளை பல்வேறு விதமான நோய்கள் தாக்குவதால், பெருத்த சேதம் ஏற்படுகிறது. இயற்கையாகவே நாட்டுக்கோழிகளில் நோய் எதிர்ப்பு சக்தி இருப்பதால், எல்லா நோய்களாலும் பாதிக்கப்படுவது இல்லை. சில நச்சுயிரி நோய்களால் வெள்ளை கழிச்சல், கோழி அம்மை நோய்கள் இளம் குஞ்சுகளை தாக்குவதால் 100 சதவீத இறப்பு ஏற்படுகிறது.

ஒட்டுண்ணி நோய்கள்

இதுதவிர ஒட்டுண்ணிகளான நாடாப்புழு, பேன் மற்றும் தெள்ளுப்பூச்சிகளின் பாதிப்பால் நாட்டுக்கோழி உற்பத்தித்திறன் பெரிதும் குறைகிறது. புறக்கடையில் வளர்க்கப்படும் நாட்டுக்கோழிகளில் உருண்டை புழுக்கள் பாதிப்பு அதிகம் காணப்படுகிறது. ஏனெனில்

பாதிக்கப்பட்ட கோழியின் எச்சத்தில் இருந்து உருவாகும் உருண்டை புழுக்களின் முட்டைகள் சுற்றுப்புறத்தை மாசுபடச் செய்கிறது.

இதனால் தரையில் தீவனத்தை கொத்தி திண்ணும் மற்ற கோழிகளுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. இந்த புழுக்கள் 60 சதவீதம் கோழிகளின் சிறுகுடலில் உண்டாகின்றன. பின்னர் கழிச்சலை ஏற்படுத்துகின்றன. இதனால் நாட்டுக்கோழிகள் தீவனத்தை குறைத்து விடுவதால், முட்டையிடும் திறன் குறைந்து விடுகிறது. இதுதவிர கோழிகளின் மூச்சுக்குழல், பெருங்குடல் மற்றும் உணவுக்குழல் போன்ற பகுதிகளில் பலவகையான பாதிப்புகள் ஏற்படுகின்றன.

<u>தடுப்பது எப்படி?</u>

இந்த பாதிப்பை தடுக்கும் வகையில், நாட்டுக்கோழி கொட்டகைகளை சுகாதாரமாக பராமரிக்க வேண்டும். கொட்டகை ஈரமற்றதாகவும், எப்போதும் உலர்ந்த நிலையில் வைத்து கொள்ள வேண்டும். இவ்வாறு செய்வதால் ஒட்டுண்ணிகளின் முட்டைகள், தீவனத்துடன் கலப்பதை தடுக்க முடியும். புதிதாக வாங்கும் நாட்டுக்கோழிகளின் எச்சத்தை, கால்நடை மருத்துவமனையில் சோதனை செய்து, அதற்கு ஏற்ற மருந்து கொடுத்து குடற்புழு நீக்கம் செய்ய வேண்டும்.

நாட்டுக்கோழிகள் வெளிப்புற ஒட்டுண்ணிகளால் தாக்கப்பட்டாலும், பேன் மற்றும் தெள்ளுப்பூச்சிகள் அதிக பாதிப்பை ஏற்படுத்துகின்றன. அதிக பாதிக்கப்பட்ட கோழிகளுக்கு தோல் அரிப்பு, இறகு உதிர்தல், ரத்தசோகை, முட்டை உற்பத்தி குறைதல் போன்ற பிரச்சினைகள் ஏற்படும். பொதுவாக பேன்களின் தாக்கம் அடைக்கோழிகளில் அதிகம் காணப்படும். இதை வசம்பு அல்லது பியூடாக்ஸ் மருந்தை பரிந்துரைக்கப்பட்ட அளவு பயன்படுத்த வேண்டும்.

<u>ரத்த கழிச்சல் நோய்</u>

எய்மீரியா என்றும் ஓரணு ஒட்டுண்ணிகள் குடலின் பல்வேறு பகுதிகளை தாக்குவதால் நாட்டுக்கோழிகளுக்கு ரத்த கழிச்சல் நோய் உண்டாகிறது. இந்த பாதிப்பு 4 முதல் 8 வார வயது குஞ்சுகளில் அதிகம் காணப்படும். இந்த நோயை சரியான நேரத்தில் கண்டறிந்து சல்பா மற்றும் ஆம்பரசால் மருந்தை குடிநீரில் கலந்து கோழிகளுக்கு கொடுக்க வேண்டும்.

மேலும், கோழி கூண்டுகளை கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்தல், கோழிகளை அடைக்கும் இடங்களில் உள்ள எச்சத்தை தினமும் நீக்கி சுத்தப்படுத்துதல், நோய்வாய்ப்பட்ட கோழிகளை பிரித்தெடுத்து அழித்து, மற்ற கோழிகளுக்கு நோய்

பரவாமல் தடுத்தல், முறையாக தடுப்பூசி போடுதல், குடற்புழு மற்றும் பூச்சி கொல்லி மருந்துகள் தெளித்து கோழிகளை தாக்கும் ஒட்டுண்ணிகளை கட்டுப்படுத்தி பராமரிக்க வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் நாட்டுக்கோழிகளில் ஒட்டுண்ணி தாக்குதலை கட்டுப்படுத்தி, இறப்பை குறைக்கலாம். இதன்மூலம் நாட்டுக்கோழி வளர்ப்பவர்கள் நிலையான வருமானம் பெறலாம்.

## நவம்பர் மாதம் இறுதிவரை மரவள்ளி கிழங்கு கிலோவுக்கு ரூ.10 வரை கிடைக்கும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் தகவல்



மரவள்ளி கிழங்கு உலக அளவில் 80–க்கும் மேற்பட்ட நாடுகளில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. 250 மில்லியன் டன்களுக்கு மேல் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியா மரவள்ளி கிழங்கு சாகுபடி பரப்பளவில் 17–வது இடத்திலும், உற்பத்தியில் 9–வது இடத்திலும், உற்பத்தி திறனில் முதலிடத்திலும் உள்ளது. இதன்படி ஒரு எக்டேருக்கு 34 ஆயிரத்து 75 கிலோ உற்பத்தி(34.75 டன்) செய்யப்படுகிறது.

<u>மரவள்ளி கிழங்கு</u>

இந்தியாவில் மரவள்ளி கிழங்கு சாகுபடி பரப்பளவு 2.32 லட்சம் எக்டேராகவும், மொத்த உற்பத்தி 8.6 மில்லியன் டன்களாகவும் உள்ளது. தமிழ்நாடு, கேரளா, மேகாலயா, அசாம், ஆந்திரா போன்ற மாநிலங்களில் மரவள்ளி கிழங்கு பரவலாக சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. மரவள்ளி கிழங்கு வேகவைத்த உணவாகவும், ஜவ்வரிசி, சிப்ஸ் போன்ற உணவு வகைகளாகவும் தயாரிக்கப்பட்டு மக்களால் விரும்பி உண்ணப்படுகிறது.

கால்நடைகள், கோழிகளுக்கு தீவனங்களாக பயன்படுத்தப்படுகிறது. தொழிற்சாலைகள் மூலம் இந்த கிழங்கில் இருந்து மாவு, குளுக்கோஸ் மற்றும் இதர பொருட்கள்

தயாரிக்கப்படுகிறது. ஏற்றுமதியை பொறுத்தவரை கடந்த 2011–12–ம் ஆண்டின் புள்ளி விவரத்தின் படி இந்தியா 8–வது இடத்தில் உள்ளது. மற்ற நாடுகளை பொறுத்தவரை தாய்லாந்து, சீனா மற்றும் வியட்நாம் போன்ற நாடுகள் ஏற்றுமதியில் முன்னணியில் உள்ளன.

<u>இந்தியாவின் ஏற்றுமதி அதிகரிப்பு</u>

இந்தியாவின் மரவள்ளி கிழங்கு ஏற்றுமதியானது கடந்த 2006–07–ம் ஆண்டுகளில் 60.86 மில்லியன்களாக இருந்தது. இது 2011–12–ல் 95.64 சதவீதமாக உள்ளது. அதாவது 34.78 சதவீதம் அதிகரித்து உள்ளது. மரவள்ளி கிழங்கு இந்தியாவில் இருந்து பச்சை கிழங்காகவும், உறையவைக்கப்பட்ட கிழங்குகளாகவும், மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

நாட்டின் மொத்த மரவள்ளி கிழங்கு உற்பத்தியில் தமிழ்நாடு மற்றும் கேரளாவின் பங்களிப்பு 88.65 சதவீதமாக உள்ளது. தமிழ்நாட்டின் மொத்த மரவள்ளி கிழங்கு சாகுபடி பரப்பளவு 1.20 லட்சம் எக்டேர் ஆகும். இதில் தர்மபுரி மாவட்டத்தில் 29.90 ஆயிரம் எக்டேரிலும், நாமக்கல்லில் 21.54 ஆயிரம் எக்டேர் பரப்பளவிலும், சேலம் மாவட்டத்தில் 19.55 ஆயிரம் எக்டேர் பரப்பளவிலும், விழுப்புரம் மாவட்டத்தில் 11.52 ஆயிரம் எக்டேர் பரப்பளவிலும், ஈரோடு மாவட்டத்தில் 8.69 ஆயிரம் எக்டேர் பரப்பளவிலும் மரவள்ளிக்கிழங்கு சாகுபடி செய்யப்படுகிறது.

<u>அதிக வரத்து</u>

தமிழகத்தில் மானாவாரியாக ஜூன்–ஜூலை மாதங்களிலும், இறவையில் செப்டம்பர்–டிசம்பர் மாதங்களிலும் பரவலாக மரவள்ளி கிழங்கு சாகுபடி செய்யப்படுகிறது. எச்–226, எச்–165, முள்ளுவாடி ஆகிய வீரிய ஒட்டு ரகங்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. சேலம், நாமக்கல், தர்மபுரி மாவட்டங்களில் 75 சதவீத பரப்பளவில் வீரிய ஒட்டு ரகங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.

இந்த ரகங்கள் பெரும்பாலும் மாவு மற்றும் ஜவ்வரிசி தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது. இதற்காக ஜூலை மாதத்தில் இருந்து, ஏப்ரல் மாதம் வரை மட்டுமே மரவள்ளி கிழங்குகள் தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்படுகின்றன. ஆனால் நவம்பர் முதல் பிப்ரவரி வரையுள்ள மாதங்களில் அதிகமான வரத்து கிடைக்கின்றன. இதற்கு குளிர் காலத்தில் கிழங்கின் மாவுச்சத்து அதிகமாக உள்ளதே காரணம் ஆகும். இந்த மாதங்களில் தொழிற்சாலைகளுக்கு மரவள்ளி கிழங்கு வரத்து அதிகமாக இருக்கும்.

நல்ல விலை கிடைக்கும்

பலதரப்பட்ட பொருட்கள் தயாரிக்க மரவள்ளி கிழங்கு அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது. இதன்படி மாவு, ஜவ்வரிசி, டெக்ட்ரோஸ், பிரக்டோஸ் போன்ற பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. இதனால் சேலம் மற்றும் அதன் சுற்று வட்டாரங்களில் 1,500 மாவு மற்றும் ஜவ்வரிசி தொழிற்சாலைகள் காணப்படுகின்றன.

இந்தநிலையில் கோவை வேளாண் பல்கலைக்கழக வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம், கடந்த 10 ஆண்டுகளாக சேலம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் விளைந்த மரவள்ளி கிழங்குக்கு, சேலம் மொத்த சந்தையில் நிலவிய விலை பற்றி ஆய்வு மேற்கொண்டது. அதன்படி நவம்பர் மாத இறுதிவரை மரவள்ளி கிழங்குக்கு கிலோ ரூ.9 முதல் ரூ.10 வரை விலை கிடைக்கும் என்று தெரியவந்துள்ளது.

## நோய் பரவும் அபாயத்தை தவிர்க்க நகராட்சி பகுதிகளில் பன்றி வளர்ப்பதற்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது திருவாரூர் நகராட்சி ஆணையர் தகவல்

நோய் பரவும் அபாயத்தை தவிர்க்க திருவாரூர் நகராட்சி பகுதிகளில் பன்றி வளர்ப்பதற்கு கட்டுப்பாடு விதிக்கப்பட் டுள்ளதாக திருவாரூர் நகராட்சி ஆணையர் (பொறுப்பு) தர்மலிங்கம் அறிவித்துள்ளார்.

வடகிழக்குப் பருவமழை

திருவாரூர் நகராட்சி ஆணையர் (பொறுப்பு) தர்ம லிங்கம் ஒரு அறிக்கை வெளி யிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் கூறியிருப்பதாவது:–

வடகிழக்குப் பருவமழையின் காரணமாக திருவாரூர் நகர் பகுதியில் மழை தொடர்ந்து மழை பெய்யும் சூழல் நிலவு கிறது. மழைக் காலங்களில் தண்ணீர் மூலம் பரவும் நோய் களுக்கான அபாயம் உள்ளது. இதை தடுக்க நகராட்சி சார் பில் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

நகராட்சி சார்பில் வழங்கப் படும் குளோரின் கலந்த பாது காக்கப்பட்ட குடிநீரை காய்ச்சி வடிகட்டி பயன்படுத்த பொதுமக்களுக்கு அறிவு றுத்தப்பட்டுள்ளது. வீட்டின் சுற்றுப்புறங்களில் தண்ணீர் தேங்காமல் பராமரிப்பது அவ சியம்.

துப்புரவு பணி

நகராட்சி துப்பரவு பணி யாளர்கள் அனைத்து வார்டு களிலும் துப்புரவு பணிகளில் ஈடுப்பட்டு வருகின்றனர். நகரை தூய்மையாக வைத்து கொள்வதற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு அளிக்க வேண் டும்.

திருவாரூர் நகரில் அனுமதி இன்றி பன்றி வளர்போர்களால் பல்வேறு தொல்லை ஏற்படுவ தாக பொது மக்களிடம் இருந்து புகார்கள் வருகின் றன.

<u>கட்டுப்பாடுகள்</u>

மேலும் பன்றி மூலம் மூளை காய்ச்சல் மற்றும் பிற நோய்கள் பரவ வாய்ப்பு உள்ளது. நோய் பரவும் அபாயத்தை தவிர்க்க பன்றி வளர்ப்போர்களுக்கு கட்டுப்பாடுகள் குறித்து நக ராட்சி மூலம் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

எனவே தொற்று நோய் பரப்பும் கார ணிகளான பன்றிகளை நக ராட்சியால் பிடித்து அப் புறப்படுத்தப்படும் என்பதோடு சம்பந்தப்பட்ட வர்கள் மீது போலீஸ்துறை மூலம் நட வடிக்கை எடுக்கப் படும்.

இவ்வாறு அந்த அறிக்கை யில் கூறப்பட்டுள்ளது.

## பழனி அடுத்த கீரனூரில் மர்ம நோய் தாக்கியதில் 3 கன்றுகுட்டிகள் உள்பட 13 கறவை மாடுகள் பலி விவசாயிகள் பீதி

பழனியை அடுத்த கீரனூரில் மர்ம நோய் தாக்கியதில் 3 கன்றுகுட்டிகள் உள்பட 13 கறவை மாடுகள் பலியாகி உள்ளன. அடுத்தடுத்து நடந்த இந்த சம்பவத்தால் விவசாயிகள் பீதியடைந்துள்ளனர்.

<u>கறவை மாடுகள்</u>

பழனியை அடுத்த கீரனூர் பகுதியில் பால் உற்பத்தி தொழிலில் ஏராளமான விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். இதற்காக அங்கு 1000–க்கும் மேற்பட்ட மாடுகள் கொட்டகைகளில் வைத்து பராமரிக்கப்பட்டு வருகின்றன.

கீரனூர் நூர் ராவுத்தர் தோட்டத்தை சேர்ந்த பால் வியாபாரிகள் லிங்கசாமி, ராமசாமி ஆகியோருக்கு சொந்தமான மாட்டுக்கொட்டகையில் 50 கறவை மாடுகள் இருந்தன. இவற்றில் கடந்த 27,28–ந்தேதிகளில் அடுத்தடுத்து 8 மாடுகள் வாயில் இருந்து நுரை போன்ற திரவம் வழிந்த நிலையில் இறந்து கிடந்தன. இதைத்தொடர்ந்து அருகில் உள்ள கால்நடை மருத்துவருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

<u>மர்ம நோய் தாக்கி பலி</u>

தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வந்து இறந்த மாடுகளை பார்வையிட்ட அவர் உடனடியாக அவற்றை பரிசோதனை செய்தார். அப்போது இந்த மாடுகள் கால் மற்றும் வாய் நோய் (காணல்நோய்) தாக்கப்பட்டு இறந்திருக்கலாம் அல்லது வேறு ஏதேனும் மர்ம நோய் தாக்கியதால் இறந்திருக்கலாம் என அவர் தெரிவித்தார். இந்த நிலையில் நேற்று மேலும் 3 கன்றுகுட்டிகள் உள்பட 5 கறவை மாடுகள் திடீரென பலியான சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அடுத்தடுத்து கறவை மாடுகள் இறந்ததால் அப்பகுதி விவசாயிகள் பீதியில் உறைந்து போயுள்ளனர்.

<u>தடுப்பூசி போடவில்லை</u>

மாடுகள் இறந்தது குறித்து மேல்கரைப்பட்டி கால்நடை மருத்துவர் இளங்கோவிடம் கேட்ட போது அவர் கூறியதாவது:–

தற்போது இறந்துள்ள மாடுகள் அனைத்தும் குறிப்பிட்ட 2 நபர்களின் பண்ணைகளில் உள்ள மாடுகளே ஆகும். அவர்கள் தங்கள் மாடுகளுக்கு முறையான தடுப்பூசி மருந்துகளை அளிக்காததாலேயே மர்ம நோய் தாக்கி அவை இறந்துள்ளன. மேலும் இறந்து போன மாடுகள் அனைத்தும் வாய், கால்களில் புண் மற்றும் வாயில் நுரை போன்ற திரவம் வழிந்த நிலையில் உள்ளது. இது கால் மற்றும் வாய் நோய் (காணல் நோய்) அறிகுறியாக இருக்கலாம். ஆனால் மாடுகள் இறப்பு குறித்த உண்மையான காரணத்தை அறிய அவற்றின் திசுக்களின் மாதிரிகள் சென்னை ராணிப்பேட்டை கால்நடை பரிசோ தனை மையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பரிசோதனையின் முடிவு வந்த பின்னரே உண்மையான காரணம் தெரியவரும்.

இவ்வாறு அவர் கூறினார்.

முன்னதாக திண்டுக்கல் கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குனர் சத்தியநாராயணன், பழனி உதவி இயக்குனர் பாபுஜி ஆகியோர் நேரில் வந்து இறந்த மாடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்தனர். அவர்கள் பரிந்துரையின்படி இந்நோய் மேலும் மற்ற மாடுகளுக்கு பரவாமல் தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

<u>விவசாயிகள் புலம்பல்</u>

கடந்த 27–ந்தேதி முதல் கீரனூர் பகுதியில் மர்ம நோய் தாக்கி கறவை மாடுகள் பலியாகி வருகின்றன. கால்நடை பராமரிப்புதுறையினர் தடுப்பு நடவடிக்கைகளை மட்டுமே இதுவரை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் மாடுகள் இறப்பு தொடர் கதையாகவே உள்ளது. எந்த நோய் தாக்கி மாடுகள் இறக்கின்றன என்பதை இதுவரை அவர்கள் கண்டறியவில்லை. இதே நிலை தொடர்ந்தால் தங்களுக்கு பெரும் இழப்பு ஏற்படும் என்று அப்பகுதி விவசாயிகள் புலம்பி வருகின்றனர்.

அதிகாரி பேட்டி

திண்டுக்கல் மாவட்டத்தில் பழனி அருகேயுள்ள கீரனூரில் நோய் தாக்கி 13 மாடுகள் பலியாகின. இதுகுறித்து திண்டுக்கல் மண்டல கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் (பொறுப்பு) டாக்டர் தங்கராஜிடம் கேட்ட போது, அவர் கூறியதாவது:–

மாவட்டத்தில் மொத்தம் 3 லட்சத்து 10 ஆயிரம் மாடுகள் உள்ளன. இந்த மாடுகளுக்கு அரசு செலவில் கால்நடைத்துறை மூலம் கோமாரி நோய் தாக்காமல் இருப்பதற்கு இலவசமாக 6 மாதத்திற்கு ஒரு முறை மாடுகளுக்கு தடுப்பூசி போடப்படுகிறது. இந்த நிலையில் பழனி அருகேயுள்ள கீரனூரில் இறந்த மாடுகளுக்கு கோமாரி நோய் தாக்கி உள்ளது. இந்த மாடுகளுக்கு நோய் தாக்காமல் இருக்க தடுப்பூசி போடப்படாமல் இருந்து இருக்கலாம்.

கோமாரி நோய் ஒரு வகை கிருமிகள் மூலம் மாடுகளுக்கு பரவுகிறது. இவைகள் வெளிநாட்டு கலப்பு இன மாடுகளை அதிக அளவில் தாக்குகிறது. காரணம் நம்முடைய நாட்டில் உள்ள தட்பவெப்ப நிலை அவைகளுக்கு ஏற்றதாக அமைவதில்லை. மேலும் தற்போது மழைக்காலங்களில் இந்த நோய் எளிதில் பரவுகின்றன. கோமாரி நோய் தாக்கிய மாடுகளுக்கு முதலில் வாயில் புண் ஏற்படும். பின்னர் அந்த மாடுகளுக்கு காய்ச்சல் ஏற்பட்டு, தீவனங்களை உட்கொள்ளாமல் இருக்கும். நோயின் தாக்கம் அதிகமாகும் போது இதயம், நுரையீரல் செயல்பாடுகள் முற்றிலும் முடங்கி மாடுகள் வாயில் நுரை தள்ளியவாறு இறக்க நேரிடும். மேலும் கோமாரி நோய் தாக்குதலுக்கு உள்ளான மாடுகளை காப்பாற்ற முடியாது. திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமப்புற பகுதிகளிலும் மாடுகளுக்கு தடுப்பூசி போடும் பணி தீவிரப்படுத்த கால்நடை மருத்துவர்களுக்கு உத்தரவிடப்பட்டு உள்ளது.

## வைகை அணையில் தண்ணீர் திறப்பு வினாடிக்கு 1,760 கன அடி நீர் வெளியேற்றம்

தேனி, வைகை அணையில் இருந்து பாசனத்திற்காக கூடுதல் தண்ணீர் திறந்து விடப்பட்டு உள்ளது. வினாடிக்கு 1,760 கன அடி வீதம் தண்ணீர் வெளி யேற்றப்பட்டு வருகிறது.

நீர்வரத்து குறைந்தது

தேனி மாவட்டம் ஆண்டிப் பட்டி அருகே 71 அடி உயர வைகை அணை அமைந்து உள்ளது. இந்த அணையின் மூலம் திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்கள் பாசன வசதி பெறுகின்றன. மேலும் தேனி உள்பட 5 மாவட்டங் களின்

குடிநீர் ஆதாரமாகவும் வைகை அணை திகழ்கிறது. கடந்த ஆண்டு காலம் கடத்திச் சென்ற பருவமழை பொய்த்துப் போனது. இதனால் வைகை அணையின் நீர் மட்டம் கிடு கிடு வென குறைந்து அணை வறண்டு போகும் சூழல் உருவானது.

வைகை அணை நீரை பாசன ஆதாரமாக நம்பி உள்ள மாவட்டங்களும் வறட் சியால் பாதிக்கப்பட்டது. இந்த ஆண்டு வடகிழக்கு பருவ மழை தொடங்கி உள்ள போதிலும், எதிர்பார்த்த அள விற்கு மழை பெய்யவில்லை. தொடர்ந்து சில நாட்கள் பெய்த மழை அதன்பின்பு நின்று விட்டது. கடந்த சில நாட்களாக தேனி மாவட்டத் தில் கடும் வெயில் வாட்டி வதைக்கிறது. இதனால் வைகை அணைக்கு நீர்வரத் தும் குறைந்து விட்டது.

கூடுதல் தண்ணீர் திறப்பு

மூலவைகை ஆற்றில் இருந்து நீர்வரத்து இல்லாத நிலையில், முல்லைப்பெரியாறு அணை யில் இருந்து மட்டுமே வைகை அணைக்கு நீர்வரத்து உள்ளது. வரத்து குறைந்து உள்ள நிலையிலும், திண்டுக் கல், மதுரை உள்ளிட்ட பகுதிகளில் பயிரிடப்பட்டு உள்ள பயிர் களை காப்பாற்றும் வகையில், வைகை அணையில் இருந்து நேற்று கூடுதல் தண்ணீர் திறந்து விடப்பட்டு உள்ளது.

நேற்று முன்தினம் அணை யில் இருந்து வினாடிக்கு 1,460 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது. நேற்று கூடுதலாக 300 கன அடி தண்ணீர் திறக்கப் பட்டது. வைகை அணையின் நீர்மட்டம் நேற்று 46.33 அடியாக இருந்தது. அணைக்கு வினா டிக்கு 230 கன அடி தண்ணீர் வருகிறது. அணை யில் இருந்து குடிநீர் மற்றும் பாசனத்திற்காக வினாடிக்கு 1,760 கன அடி தண்ணீர் திறந்து விடப்படு கிறது. அணையில் மொத்தம் 1,547 மில்லியன் கன அடி தண்ணீர் இருப்பு உள்ளது.

பெரியாறு அணை

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் நேற்று 117.30 அடியாக காணப் பட்டது. அணைக்கு வினா டிக்கு 388 கன அடி தண்ணீர் வருகிறது. அணையில் இருந்து வினாடிக்கு 800 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப் படுகிறது. அணையில் மொத் தம் 2 ஆயிரத்து 249 மில்லியன் கன அடி தண்ணீர் இருப்பு உள்ளது.

அணைகளின் நீர்மட்டம் வேகமாக குறைந்து வரும் நிலையில் பருவமழை தொடர்ந்து பெய்ய வேண்டும் என்று விவசாயிகள் எதிர் பார்ப்புடன் காத்திருக் கின்றனர்.

## தேனி மாவட்டத்தில் அனுமதி இல்லாத உரத்தை வாங்கி நஷ்டம் அடையும் விவசாயிகள்

தேனி மாவட்டத்தில் அனுமதி இல்லாத உரத்தை வாங்கி பயன்படுத்தும் விவசாயிகள் பயிர்கள் கருகுவதால் நஷ்டம் அடைந்து வருகின்றனர். போலி உரம் விற்பனை குறித்து தகவல் தெரிவித்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று வேளாண்மைத்துறை அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

தரமற்ற உரம் விற்பனை

விவசாய பயிர்களுக்கு ரசா யன உரம் பயன்பாடு அதி கரித்து உள்ளது. உணவுப் பொருட்கள் உற்பத்தியை பெருக்க ரசாயன உரம் தவிர்க்க முடியாததாக மாறி விட்டது. இதனால் உரிய அனுமதி பெற்று தயாரிக்கப் பட்ட உரங்கள், ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு விற் பனைக்கு கொண்டு வரப்படு கிறது. அனுமதி பெற்ற மொத்த வியாபாரிகள் மற்றும் சில்லறை வியாபாரிகள் மூலமாக உரம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் தேனி மாவட்டத்தில் போடி, தேனி உள்ளிட்ட இடங்களில் அரசு அனுமதி இல்லாத உரங்கள் விற் பனை செய்யப்பட்டு வருகிறது. அதிக சக்தி வாய்ந்த உரம் என்றும், இத்தகைய உரத்தை பயன்படுத்தினால் விளைச்சல் அதிகரிக்கும் என்றும் போலியான அறிவிப்புகள் செய்து உரம் விற்பனை செய்யப்படுகிறது.

பயிர்கள் கருகின

ஒரு மூட்டை ரூ.550 என்ற விலையில் இந்த உரங்கள் கிராமத்தில் உள்ள விவசாயி களை தேடிச் சென்று விற் பனை செய்யப்படுகிறது. போடி பகுதியை சேர்ந்த விவ சாயி ஒருவர் இந்த உரத்தை வாங்கி பயன்படுத்தியதால் நெற்பயிர்கள் கருகிவிட்டது. இதனால் பாதிக்கப்பட்ட விவசாயி வேளாண்மைத்துறை அதிகாரிகளிடம் புகார் செய்து உள்ளார். இது தொடர்பாக அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணையில் அந்த உரம் அனுமதியின்றி போலியாக விற்பனை செய்யப்பட்டு வருவது கண்டு பிடிக்கப்பட்டு உள்ளது.

இதனால் லாரிகள், டிராக் டர்களில் கொண்டு வந்து விற்பனை செய்யப்படும் அனு மதி இல்லாத உரத்தை பயன் படுத்த வேண்டாம் என்று விவசாயி களுக்கு வேளாண் மைத்துறை அதிகாரிகள் அறிவுறுத்தி வருகின்றனர்.

அதிகாரி விளக்கம்

இதுகுறித்து வேளாண்மைத் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:-

தேனி மாவட்டத்தில் இது போன்ற அனுமதியற்ற உரங் கள் விற்பனை செய்யப்படு வதாக புகார்கள் வந்து உள்ளன. இதனால் இத்தகைய உரம் விற்பனை குறித்து கண் காணிக்கப்பட்டு வருகிறது.

கிராமத்தை தேடி வந்து விற்பனை செய்யப்படும் இதுபோன்ற உரத்தை விவ சாயிகள் பயன்படுத்த வேண் டாம். அங்கீகரிக்கப்பட்ட உரம் விற்பனை நிலையங்களில் விலைப்பட்டியல் பெற்று உரங்களை வாங்கி பயன்படுத்த வேண்டும். விலைப் பட்டியல் கொடுக்க மறுத்தாலோ, போலி உரம் விற்பனை குறித்து விவசாயிகள் அறிந்தாலோ உடனடியாக அருகில் உள்ள வேளாண்மைத்துறை உதவி இயக்குனர் அலுவலகத்தில் புகார் செய்யலாம்.

இவ்வாறு அந்த அதிகாரி கூறினார்.